Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.60/2018

**Depositions of PW- 3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ராஜலட்சுமி | Occupation | |
| Husband name | சிவக்குமார் | Calling | |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of January 2026.

07.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அசா.1 எனக்கு மச்சாண் உறவு முறை ஆவார். ஆஜர் எதிரியை தெரியும் அவர்தான் விபத்து ஏற்படுத்திய நபர். இவ்வழக்கில் இறந்த சிவக்குமார் எனது கணவர் ஆவார். கடந்த 09.07.2016 அன்று ஆசிலாபுரம் மருதப்பர் சாமி கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக எனது கணவர் தனது TN 84 6122 என்ற எண் கொண்ட Hero Honda Splendor இருசக்கர வாகனத்தில் சென்றார். அன்று மதியம் 03.00 மணியளவில் சாமி கும்பிட்டுவிட்டு மடவார் வளாகம் அருகே கிருஷ்ணா நகர் பக்கத்தில் வந்துகொண்டிருந்தபோது ஆஜர் எதிரியின் லாரியானது ரோட்டின் வலது புறம் ஏறிவந்து எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் எனது கணவருக்கு இடதுபக்கம் முழுவதும் காயம் ஏற்பட்டது. எனது கணவர் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார்கள். எனது உறவினரான அசா.1 ராமானுஜம் என்பவர் எனக்கு சம்பவம் பற்றி தகவல் தெரிவித்தார்.

நான் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்த்தேன். மேற்படி சம்பவம் சம்மந்தமாக போலீசார் வந்து என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.